**செய்தி வெளியீடு எண்: 947** **நாள்:10.12.2020**

## செய்தி வெளியீடு

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான கருத்தரங்கு தொடர்

ஆண்டுதோறும் நவம்பர் 25 ஆம் தேதி பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு பன்னாட்டு நாளாக கடைப்பிடிக்கப்படுவதையொட்டியும் சர்வதேச தினமான 25.11.2020ல் துவங்கி மனித உரிமைகள் தினமான 10.12.2020 வரை 16 நாட்களுக்கான பல்வேறு நிகழ்ச்சி நிரல்களை கொண்டுள்ள நிலையில் தமிழக அரசு இவ்வாண்டு பன்னாட்டு பெண்கள் அவை மற்றும் பன்னாட்டு குழந்தைகள் வளர்ச்சி நிதியத்துடன் இணைந்து இது தொடர்பான 6 நாட்கள் கருத்தரங்கு தொடரினை நடத்தியது. 2020 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள். ***ஆரஞ்சு வண்ண உலகு: நிதி, செயல், தடுப்பு, தகவல் திரட்டு*** *ஆகும் .*

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிராக நடைபெறும் வன்முறைகளை தடுத்து ஒழித்திடும் தரவுகளை சேகரித்து உயிர் காக்கும் பணியை மேற்கொள்ளவும், கொரானா 19 பெருந்தொற்று கால வன்முறையில் பாதிக்கப்பட்டோருக்கு உரிய ஆதரவளிக்க தேவையான அத்தியாவசிய பணிகளை அறுதியிட்டு வழங்கவும் உலகளாவிய பரப்புரையை அதிகரித்திட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி பல்லாண்டு கால முயற்சிகளின் செயல் திட்டமான ***பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழித்திட இணைந்து செயல்படுவோம்*** என்ற இயக்கத்தினை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளை தடுப்பதில் உறுதி பூண்டு முன்னோடியாக திகழும் தமிழக அரசு உலகளாவிய இவ்வழைப்பினை ஏற்று, அதன் முகமாக பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பது சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய கருத்தரங்கு தொடரினை டிசம்பர் 2, 2020 அன்று முதல் 6 நாட்கள் சிறப்பாக நடத்தியது. பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகளை ஒழிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இக்கருத்தரங்கு தொடரில் விவாதிக்கப்பட்டுள்ளது. மாநில வளர்ச்சி கொள்கை குழுவின் மாண்புமிகு துணைத்தலைவர் திரு. சி. பொன்னையன் அவர்களால் இக்கருத்தரங்கு தொடர் துவக்கி வைக்கப்பட்டது. தமிழக அரசின், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம், உள் துறை (குறிப்பாக காவல் துறை), ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சிகள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், மற்றும் திட்டம் மற்றும் வளர்ச்சி ஆகிய பல்வேறு துறைகளின் கூட்டு முயற்சியுடன் ஐக்கிய நாடுகள் முகமை, பன்னாட்டு பெண்கள் அவை, பன்னாட்டு குழந்தைகள் வளர்ச்சி நிதியம் ஆகியவற்றின் பங்களிப்போடு தமிழக அரசால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கு தொடரில் நேரடி களப்பதிவு, ஊராட்சி மற்றும் சுயஉதவிக் குழு பிரதிநிதிகள் மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடியவர்கள், வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள், முக்கிய கொள்கை முடிவு மேற்கொள்பவர்கள் மற்றும் திட்ட செயலாக்க நிறுவனங்கள் ஆகியோர்களது கருத்துக்களையும் ஒருங்கிணைத்து இப்பிரச்சனை சார்ந்த சிக்கல்களை

விவாதித்து பெண்களுக்கெதிரான வன்முறைகளை முற்றிலுமாக ஒழித்திட மேற்கொள்ள வேண்டிய தீர்வுகளை கண்டறியும் ஒரு தளமாக அமைந்தது.

முதல் நாள் அமர்வில் (02.12.2020) பெண்களுக்கெதிரான *பாலின பரிமாணம் சார்ந்த வன்முறை* மைய விவாதப்பொருளாக திகழ்ந்தது. இரண்டாம் நாள் (05.12.2020) அமர்வு மையப்பொருள்–பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறை – ஒரு அமைதியான பெருந்தொற்று. மூன்றாம் நாள் (07.12.2020) பெண்களுக்கெதிரான வன்முறையை தடுத்தல், மீட்டல் மற்றும் மறுவாழ்வளித்தல், நான்காம் நாள் அமர்வு (08.12.2020) பெண்களுக்கெதிரான வன்முறைகளை தடுக்கத் தேவையான வளங்களை திறம்படக் கையாளல், தரவுகள் பரிமாற்றம், ஐந்தாம் நாள் அமர்வு (09.12.2020) திறன் உருவாக்கம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தல், நிறைவு நாள் (10.12.2020) பன்னாட்டு மனித உரிமை நாளோடு ஒத்திசைவாக பெண்ணுரிமையும் மனித உரிமையே என்பதை வலியுறுத்தும் முகமாக ஒன்றிணைந்த நடவடிக்கைக்கு ஒன்றுபடுவதற்கு உழைப்பதுமாகும் (UNiTE), இந்நிகழ்ச்சிகளின் வாயிலாக பெறப்பட்ட முடிவுகளின் சாராம்சத்தினை அரசின் முடிவுக்கென வழங்கப்படும். பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஏதுமில்லா பாதுகாப்பான மாநிலமாக தமிழகத்தை மாற்றிடவும் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக தமிழகத்தைத் திகழச்செய்வதும் இக்கருத்தரங்கு தொடரின் நோக்கமாகும்.

நிறைவு நாள் நிகழ்வின்போது, தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், முன்னாள் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக, நல்வாழ்விற்காக செயல்படுத்திய நலத்திட்டங்கள் குறித்தும், பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்தும் விரிவுரையாற்றினார். குறிப்பாக நிர்பயா சம்பவத்தின்போது பாலியியல் வன்முறைக்கு எதிராக 16அம்ச பரிந்துரைகளில் குற்றவாளிக்கு கடுமையான தண்டனை பரிந்துரைக்கப்பட்டதனை நினைவுகூர்ந்தார்.

இக்கருத்தரங்கு தொடரில் முக்கிய உரையாற்றிய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், மருத்துவர். வி. சரோஜா அவர்கள் பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கும் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கும் இடையேயான ஆழமான தொடர்பை எடுத்துரைத்தார். மேலும், தமிழக அரசு எடுத்துள்ள சீரிய முயற்சிகளையும் அரசின் பல்வேறு நலத்திட்டங்களையும் விரிவாக எடுத்துரைத்தார். அரசுத் துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு மக்களும் பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதில் கரம் கோர்த்து செயல்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

திரு. P.M. நாயர், இந்திய காவல் பணி (ஓய்வு), தலைவர், டாடா சமூக அறிவியல் நிறுவனம் தமது உரையில் இவ்வன்முறையில் பல்வேறு பரிமாணங்களை அறிந்துக்கொள்ள நுண்ணிய அளவில் ஆய்வு மேற்கொள்ள வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார். கல்லூரி அளவிலும், ஊராட்சி அளவிலும் சிறு குழுக்களை ஏற்படுத்தி ஆட்கடத்தலை தடுக்கலாம் என்று பரிந்துரைத்தார். பெண்களுக்கெதிரான வன்முறையைத் தடுக்க

சிந்தனையைத் தூண்டும் கருத்தாக அடையாளப்படுத்திடு, அதைப் பேசிடு, நடவடிக்கை எடுத்திடு, வன்முறையை தடுத்திடு என்ற கருத்தினை முன்வைத்தார்.

இணைய வழி வாயிலாக உரையாற்றிய ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பின் இந்தியப் பிரதிநிதி திருமதி. சூசன் பர்குசன் அவர்கள் தமிழக அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களையும் இக்கருத்தரங்கு தொடர் ஏற்பாடுகளையும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை களைய தமிழக அரசு முனைப்புடன் செயல்படுவதையும் புகழ்ந்துரைத்தார். இந்நிகழ்வில் உயர் அரசியல் பிரமுகர்கள் பங்குபெற்று பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்திருப்பதன் மூலம் இந்நிகழ்வில் தமிழக அரசிற்கு உள்ள அர்ப்பணிப்பு உணர்வு பிரதிபலிப்பதாக கூறினார்..

திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப. அவர்கள் 5 நாட்கள் கருத்தரங்குத் தொடர் நிகழ்வின் அறிக்கையினை தொகுத்து வழங்கினார். ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பஞ்சாயத்து தலைவர்களின் மூலமாக இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என தெரிவித்தார். சமூக நலத்துறையின் அரசு செயலாளர் திருமதி. மதுமதி, இ.ஆ.ப., அவர்கள் பாலின வன்முறையை தடுக்கும் வகையிலான வலுவான கட்டமைப்பு தொடர்புகளை உருவாக்குதலை வலியுறுத்தினார்.

ஆறு நாள் நிகழ்வின் பரிந்துரைகள் மற்றும் முடிவுகள் சுருக்கமாக பின்தொடர் நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய துறைகளுடன் பகிரப்படும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**